E.P.No.2/2019
Date.25.07.2019
Witness: MW 1 Thiru.Premkumar

சாட்சிக்கு பிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியிடம் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை -

மனுதாரரை வேலை நீக்கம் செய்தபோது நான் எந்த எதிர்மனுதாரரிடம் வேலை செய்தேன் என்றால் 1ம் எதிர்மனுதாரரான NEPC நிறுவனத்தில் வேலை செய்தேன். PAT Staff Standing Order 1ம் எதிர்மனுதாரர் மற்றும் 2ம் எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் பணிபுரியும் Staff களுக்கு பொருந்தும் என்றால் ஆமாம். 1ம் எதிர்மனுதாரர் நிர்வாகம் கவர்கல் வேவர்லி எஸ்டேட்டை 2ம் எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு 1.11.2009 தேதியில் குத்தகைக்கு விட்டுவிட்டது என்றால் ஆமாம். கவர்கல் வேவர்லி எஸ்டேட் 1ம் எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் கீழ் இருந்த 31.10.2009 தேதிவரையில் தொழிலாளி மற்றும் பணியாளரை பணி நீக்கம் செய்திருந்தால் அவரை மீண்டும் வேலையில் சேர்த்துக்கொள்வதற்கு 1ம் எதிர்மனுதாரர் நிர்வாகம் கடிதம் கொடுக்க வேண்டும் என்றால் ஆமாம். 1.11.2009 தேதிக்கு பிறகு பணி நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளி மற்றும் பணியாளரை மீண்டும் பணியில் சேர்த்துக்கொள்ள 1ம் எதிர்மனுதாரர் நிர்வாகம் கடிதம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. மனுதாரரை 25.01.2011 தேதியிட்ட உத்தரவின்மூலம் 1ம் எதிர்மனுதாரர் 05.02.2011 தேதியில் இருந்து பணிநீக்கம் செய்தார் என்றால் ஆமாம். குத்தகை தேதியில் இருந்து இன்றுவரை கவல்கல் வேவர்லி எஸ்டேட் 2ம் எதிர்மனுதாரரின் நிர்வாகத்தின்கீழ் இருந்து வருவதால் 2ம் எதிர்மனுதாரர் நிர்வாகம்தான் மனுதாரருக்கு வேலை வழங்கவேண்டும் என்றால் சரிதான்.

மறுவிசாரணை - இல்லை.